செய்தி வெளியீடு எண்: 603 நாள் :9.11.2013

## <u>சென்னை தரமணியில் உள்ள எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தில், மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு கே.டி. ராஜேந்திர பாலாஜி அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.</u>

சென்னை தரமணியில் உள்ள எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் ஆணையிடப்பட்டு, நடைபெற்று வரும் வளர்ச்சிப் பணிகள், திரைப்படக் கல்லூரியில் பயின்று வரும் மாணவர்களின் முன்னேற்றத்திற்கும், பயன்பாட்டிற்கும், இம்மாணவர்கள் தங்களின் பயிற்சிகளில் சிறந்து விளக்கும் வண்ணம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் செயல்படுத்தப்பட்டுள்ள திட்டங்கள் ஆகியவற்றை மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு கே.டி. ராஜேந்திர பாலாஜி அவர்கள் அன்று (08.11.2013) ஆய்வு மேற்கொண்டார்.

மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அவர்கள் திரைப்படக் கல்லூரியில் மாணவர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சிக் குறித்தும், பயிற்சி பெற்ற மாணவர்களின் திறமை வெளிப்பாடு குறித்தும் கேட்டறிந்தார். மாணவர்களுக்கு அளிக்கும் பயிற்சியினை உலகத்தரம் மிக்கதாக மேற்கொள்ள கல்லூரி முதல்வர் மற்றும் ஆசிரியர்களுக்கு அறிவுரைகள் வழங்கினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ரூ.3.69 கோடி மதிப்பில் கட்டப்பட்டு வரும், உயிர்ப்பூட்டல் மற்றும் காட்சிப்பயன் (Animation and Visual Effects) பற்றிய புதிய பாடப்பிரிவுக்கான புதிய கட்டிடம் கட்டும் பணியை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர், ரூ.99 இலட்சம் மதிப்பீட்டில், திரைப்படக் கல்லூரியில் உள்ள முன்காண் திரையரங்கத்தை (Preview Theatre), நவீன மயமாக்கிடும் வகையில் நடைபெற்று வரும் புனரமைப்புப் பணிகளை பார்வையிட்டார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ரூ.1 கோடியே 83 இலட்சம் செலவில் செல்வந்தர் மாளிகை மற்றும் டப்பிங் தியேட்டர் ஆகியவற்றை படப்பிடிப்புத் தளமாக மாற்றி புனரமைக்கும்

பணி நடைபெற்று வருவதை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். திரைப்படக் கல்லூரியில் பயிலும் மாணவர்களின் பயன்பாட்டிற்கு ரூ.11 இலட்சம் செலவில் வாங்கப்பட்டுள்ள புதிய வாகனத்தை பார்வையிட்டார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ரூ.2 கோடி செலவில் கட்டப்பட உள்ள திரைப்படக் கல்லூரி மாணவர்களுக்காக புதிய தங்கும் விடுதிக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள இடத்தை பார்வையிட்டார். அனைத்துப் பணிகளையும் விரைந்து முடித்து மாணவர்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என பொதுப்பணித்துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின் போது, தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் முனைவர் மூ.இராசாராம் இ.ஆ.ப. அவர்கள், செய்தித் துறை துணை இயக்குநர் (நினைவகங்கள்) திரு உல.ரவீந்திரன், எம்.ஜி.ஆர்.அரசு திரைப்படக் கல்லூரி முதல்வர் (பொறுப்பு) திரு ந. சீனிவாசன் மற்றும் பொதுப்பணித் துறை அலுவலர்கள் பங்கேற்றனர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**